# கற்றலில், ஆசிரியர் - மாணவர் உறவின் தாக்கம்

**S. Athirathan***
*Dept.of Social Scienc Education, Faculty of Education, University of Colombo, Sri Lanka*

**ஆய்வுச்சுருக்கம்**

இந்த ஆய்வு, கொழும்பு தெற்கு கல்வி வலய தமிழ்மொழிமூல இடைநிலைப் பாடசாலைகளில் ஆசிரியர்-மாணவர் உறவு மாணவர்களின் கற்றல் விளைவுகளில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டது. தனிநபர் மற்றும் சமூக வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாதது. மேலும், ஆசிரியர்-மாணவர் உறவின் தரமானது, மாணவர்களின் கற்றல் செயற்பாடு, ஊக்கல், உணர்வு மற்றும் முழுமையான கற்றல் அனுபவம் ஆகியவற்றை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. பரஸ்பர மரியாதை, நம்பிக்கை, ஆதரவு மற்றும் இடைவினை ஆகியவற்றால் வளர்த்தெடுக்கப்படும் நேரான ஆசிரியர்-மாணவர் உறவு, உள்ளடங்கல் கற்றல் சூழலை வளர்க்க உதவுகின்றது. மாறாக, எதிரான ஆசிரியர்-மாணவர் உறவு கற்றல் ஈடுபாடின்மைக்கும் பாதகமான விளைவுகளுக்கும் வழிவகுக்கின்றது. இந்த ஆய்வானது விபரண மற்றும் இணைவு ஆய்வு வடிவங்களைப் பின்பற்றி அளவு சார்ந்த அணுகுமுறையில் முன்னெடுக்கப்பட்டது. தொடர்பாடல், ஒத்துழைப்பு, நம்பிக்கை, ஈடுபாடு மற்றும் ஊக்கல் போன்ற பரிமாணங்களை மதிப்பிடும் வகையில் Likert அளவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் 100 ஆசிரியர்கள் மற்றும் 100 மாணவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக் குடித்தொகையின் சரியான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக, படைமுறை எழுமாற்று மாதிரி முறை மூலம் மாதிரி தெரிவு செய்யப்பட்டது. மேலும், தரவுப் பகுப்பாய்வில் விபரணப் புள்ளிவிபர நுட்பங்கள், பியர்சனின் தொடர்புச் சோதனை மற்றும் பிற்செலவு மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆய்வின் முடிவுகளாக, ஆசிரியர்-மாணவர் உறவுமுறை கற்றல் அடைவில் மிதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது, ஆசிரியர் -மாணவர் உறவின் தரம், மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்கல் ஆகியவற்றுக்கு இடையே பொருண்மையான நேர்த் தொடர்புகள் ($r$ = .68 முதல் .75 வரை, $p < .001$) காணப்படுகின்றன. ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துணர்வும் ஊக்கலும் மாணவர்களின் சுயஊக்கலையும் திருப்தியையும் கணிசமான அளவில் பாதிக்கின்றன. மாணவர்களுடனான தங்கள் உறவுகள் மற்றும் கற்பித்தல் நடைமுறைகள் குறித்து ஆசிரியர்கள் கொண்டிருக்கும் புலக்காட்சிக்கும் கற்பித்தலுக்கும் இடையில் நேரான தொடர்பு நிலவுகின்றது. மாணவருடனான உறவுகள் குறித்து நேரான புலக்காட்சியைக் கொண்ட ஆசிரியர்கள், மாணவர்களை மையமாகக் கொண்ட கற்பித்தல் உத்திகளை அதிகம் பின்பற்ற முனைகிறார்கள் என்றும், இது அதிக ஈடுபாட்டிற்கும் மேம்பட்ட கற்றல் விளைவுகளுக்கும் பங்களிக்கிறன, கலாசார ரீதியாகப் பன்முகத்தன்மை வாய்ந்த சூழல்களில், தொழில்முறை மேம்பாட்டின் மூலம் வலுவானதும் ஒத்துணர்வானதுமான ஆசிரியர்-மாணவர் உறவை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை இந்த முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. உறவுமுறை தொடர்புகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் கல்வித் தரத்தையும் சமத்துவத்தையும் மேம்படுத்த முடியும் என்பது இந்த ஆய்வினூடாக வெளிப்படுத்தப்பட்டது.

**முதன்மைப் பதங்கள்:** ஆசிரியர் மாணவர் உறவு, இடைவினை, கற்றல், தாக்கம்

*sabaaathi@sse.cmb.ac.lk*

**அறிமுகம்**

கல்வியானது தனிநபர் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைகிறது. அது, தனிப்பட்ட மற்றும் கூட்டு வளர்ச்சிக்குத் தேவையான அறிவு, திறன்கள், மனப்பான்மைகள் மற்றும் விழுமியங்களை வளர்த்து, வருங்கால சந்ததியினரின் மனப்பாங்கை வடிவமைக்கிறது. கல்விச் செயற்பாட்டின் மையமாக இருப்பது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவாகும். இது கற்றல் விளைவுகளைக் கணிசமாகப் பாதிக்கும் ஒரு சிக்கலான மற்றும் ஆற்றல் மிக்க பிணைப்பாகும். இந்த உறவின் தரம், மாணவர்களின் கற்றல் அடைவு, ஊக்கல், உணர்வுபூர்வமான நல்லுறவு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவுவதாகவோ அல்லது தடையாகவோ அமையலாம்.

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஆசிரியர்-மாணவர் உறவின் தாக்கத்தைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகிறது. இந்த உறவு வெறும் பரிவர்த்தனை சார்ந்தவையாக மட்டுமன்றி அவை இயல்பிலேயே உறவுசார்ந்த, உணர்வு பூர்வமான கற்பித்தல் சார்ந்தவை. நேரான ஆசிரியர்-மாணவர் உறவுகள் பரஸ்பர மரியாதை, நம்பிக்கை, ஊக்கம் மற்றும் திறமையான தகவல் தொடர்பு ஆகியவாறாக வகைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய பிணைப்புகள், கற்றலுக்கு உகந்த சூழலை வளர்க்கவும், மாணவர்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கவும், கல்விசார் செயல்திறனை மேம்படுத்தவும் உதவும். இதற்கு மாறாக, இறுக்கமான அல்லது எதிரான ஆசிரியர்-மாணவர் உறவு ஈடுபாடின்மை, நடத்தை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் மோசமான கல்வி விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

கொழும்பு தெற்குக் கல்வி வலயத்திலுள்ள தமிழ்மொழிமூல இடைநிலைப் பாடசாலைகளின் சூழலில், இந்த உறவுகள் கற்றல் விளைவுகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆய்வு செய்வது இந்த ஆய்வின் முதன்மையான நோக்கமாகும். ஆசிரியர்களின் பணியானது கற்பித்தல் கடமைகளுக்கு அப்பால் வழிகாட்டுதல், உணர்ச்சிபூர்வமான ஆதரவு, ஊக்கல், தன்னம்பிக்கையகைக் கட்டியெழுப்புதல் மற்றும் சமூகத் தொடர்பு போன்றவற்றை உள்ளடக்கியதாக விரிவடைகிறது. இந்தத் தொடர்புகளின் தன்மை, கற்றல் மீதான மாணவர்களின் நேரான மனப்பான்மையையும் அவர்களின் ஒட்டுமொத்த கற்றல் அனுபவத்தையும் கணிசமாக வடிவமைக்க உதவுகிறது. மாணவர்களின் கற்றல் அடைவில் ஆசிரியர்-மாணவர் உறவு மிகவும் செல்வாக்கு மிக்க காரணிகளில் ஒன்றாக இருப்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. பல்வேறு கல்விச் சூழல்களில் நடத்தப்பட்ட ஆய்வுகள், மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களை தம்மீது அக்கறையுள்ளவர்களாகவும், பக்கச்சார்பற்றவர்களாகவும் ஆதரவளிப்பவர்களாகவும், நியாயமானவர்களாகவும் உணரும்போது, அவர்கள் கல்வியில் சிறப்பாகச் செயல்படுவதாகவும், வகுப்பறை மட்டச் செயற்பாடுகளில் மிகவும் தீவிரமாகப் பங்கேற்பதாகவும், பாடசாலை தொடர்பாக உடன்பாடான மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதாகவும் நிரூபித்துள்ளன. இதற்கு நேர்மாறாக, எதிரான ஆசிரியர்-மாணவர் உறவு கல்வியில் ஈடுபாடின்மை, வருகையின்மை மற்றும் இடைவிலகுதல் விகிதங்களுக்கு வழிவகுப்பதாக அமைவதும் கண்டறியப்பட்டது.

இலங்கையில், ஆசிரியர்-மாணவர் உறவின் முக்கியத்துவம் பண்புரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், வேறுபட்ட பாடசாலைச் சூழல்களில் அவற்றின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு விஞ்ஞான முறையிலமைந்த, சூழ் நிலைக்கு ஏற்ற ஆய்வுகள் தேவைப்படுகிறன. தனித்துவமான சமூக-மொழிப் பண்புகளைக் கொண்ட கொழும்புக் கல்வி வலய தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் பெரும்பாலும் சிறுபான்மை மொழி பேசுபவர்கள், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்கள் மற்றும் கலாசார ரீதியாக வேறுபட்ட சமூகங்கள் உட்பட பல்வேறு பின்னணிகளைக் கொண்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்தச் சூழலில் ஆசிரியர்-மாணவர் உறவு எவ்வாறு காணப்படுகிறது என்பதை ஆராய்வதும் கல்வித் தரம் மற்றும் சமவாய்ப்பை மேம்படுத்துவதில் அதன் தாக்கத்தை ஆராய்வதனையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

மேலும், இந்த உறவினைப் புரிந்துகொள்வது ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்சார்ந்த வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். மாணவர்களுடன் நேரான நல்லுறவை உருவாக்கும் திறன்களுடன் கூடிய ஆசிரியர்கள், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் ஈடுபாடு மிக்க கற்றல் சூழலை உருவாக்க முற்படுகின்றனர். அத்தகைய சூழல், மாணவர்களிடையே கல்வி வெற்றி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. ஆசிரியர்-மாணவர் தொடர்புகளின் தரத்தைப் பாதிக்கும் காரணிகளான ஆசிரியர் மனப்பான்மைகள், தொடர்பாடல் பாணிகள், வகுப்பறை முகாமைத்துவத் திறன்கள் மற்றும் கலாசார உணர்திறன் ஆகியவை நேரான ஆசிரியர்-மாணவர் உறவின் முக்கிய கூறுகளை அடையாளம் காணவும், அதனை மேலும் வலுப்படுத்தவும் உதவுகிறது. மேலும் பல்வேறு கற்றல் குறிகாட்டிகளில் அவற்றின் செல்வாக்கை மதிப்பிடவும், இந்தத் தொடர்புகளை வடிவமைக்கும் சூழல் காரணிகளை ஆராயவும் இது முயல்கிறது. இந்தக் குறிப்பிட்ட கல்விச் சூழலில் கவனம் செலுத்துவதன் மூலம், பயனுள்ள கற்பித்தல் மற்றும் அர்த்தமுள்ள கற்றலுக்கு அடிப்படையாக அமையும் உறவுமுறைகளின் இயக்கவியல் குறித்த நுணுக்கமான புரிதலுக்கு இந்த ஆய்வு பங்களிக்க முயல்கிறது. இலங்கையில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவிப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் முயற்சிகளைக் கருத்தில் கொள்ளும்போது, இந்த ஆய்வு காலத்திற்கு ஏற்றதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது. பாடசாலைகளில் பல்வேறுபட்ட வடிவங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கற்றல் அனுபவங்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் அதனை மேலும் மேம்படுத்தவும் இந்து ஆய்வு உதவுகிறது. இன்று, கற்றல்-கற்பித்தலின் உறவுமுறை அம்சங்களைப் புரிந்துகொள்வது கூடிய முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள், கல்விக்கொள்கை வகுப்பாளர்கள், பாடசாலை முகாமையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு, வலுவான ஆசிரியர்-மாணவர் பிணைப்புகளை வளர்ப்பதற்கான நுட்பங்களையும் அதன் அவசியத்தினையும் விளக்குவதுடன் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் உதவும்.

### ஆய்வின் நோக்கமும் குறிக்கோகள்களும்

#### *ஆய்வு நோக்கம்*

கொழும்பு தெற்கு கல்வி வலய தமிழ்மொழி மூலப் பாடசாலை மாணவர்களின் கற்றல் விளைவுகளின் மீது ஆசிரியர்-மாணவர் உறவின் தாக்கத்தை ஆராய்தல்.

#### *ஆய்வுக் குறிக்கோள்கள்*

1. கொழும்பு தெற்கு கல்வி வலய தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர்-மாணவர் உறவின் தன்மை மற்றும் தரத்தை ஆய்வு செய்தல்.
2. மாணவர்களின் கற்றல் மற்றும் ஊக்கலின் மீது ஆசிரியர்-மாணவர் உறவின் செல்வாக்கை மதிப்பிடுதல்.
3. சிறந்த கற்றல் சூழல்களையும் கற்றல் அடைவுகளையும் மேம்படுத்துவதற்காக ஆசிரியர்-மாணவர் உறவை மேம்படுத்துவதற்கான உபாயங்களைப் பரிந்துரை செய்தல்.

### இலக்கிய மீளாய்வு

ஆசிரியர்-மாணவர் உறவின் விளைவுகளை அறிந்து கொள்வது, குறிப்பாக மாணவர்களின் கற்றல் விளைவுகளில் அதன் செல்வாக்கு தொடர்பாக, கல்வி ஆய்வுகளில் ஒரு முக்கிய அம்சமாக மாறியுள்ளது. நேரான ஆசிரியர்-மாணவர் உறவுகள், கல்விசார் சாதனை, சமூக-உணர்ச்சி வளர்ச்சி மற்றும் மாணவர்களின் முழுமையான மேம்பாடு மற்றும் நல்வாழ்வுக்கு உகந்த ஒரு சூழலை வளர்க்கின்றன என்று சமீபத்திய ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. இந்த இலக்கிய மீளாய்வு, ஆசிரியர்-மாணவர் உறவானது கற்றலை எவ்வாறு பாதிக்கின்றது என்பதைப் பகுப்பாய்வு செய்ய 2015-க்குப் பிந்திய சில ஆய்வுகளை ஆராய்கிறது. அந்த வகையில் ஆசிரியர்-மாணவர் உறவு, உணர்ச்சி, நடத்தை மற்றும் அறிவாற்றல் பரிமாணங்களை உள்ளடக்கியுள்ளன என்று சமீபத்திய ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. Roorda et al. (2011) நேரான ஆசிரியர்-மாணவர் உறவானது, அரவணைப்பு, வெளிப்படையான தொடர்பு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றால் உருவாக்கப்படுவதாக எடுத்துக்காட்டியுள்ளதுடன் இவை மாணவர்களின் ஈடுபாடு மற்றும் கற்றலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கண்டறிந்தனர்.

Vygotsky (1978) இன் சமூக வளர்ச்சிக் கோட்பாடு மாதிரிகள், அறிவாற்றல் வளர்ச்சியில் சமூகத் தொடர்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. மேலும், மாணவர்களின் கற்றலுக்குத் துணைபுரியும் ஒரு முக்கிய முகவராக ஆசிரியரை அது நிலைநிறுத்துகின்றது மேலும், Ainsworth, (2015) என்பவர் இணைப்புக் கோட்பாடு கல்விச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது, பாதுகாப்பான ஆசிரியர்-மாணவர் பிணைப்புகள் ஒரு பாதுகாப்பான கற்றல் சூழலை உருவாக்குகின்றன என்றும், அது கல்விசார் செயல்திறனை மேம்படுத்துகிறது என்றும் கூறுகிறது. ஆசிரியர் உறவு மற்றும் கற்றல் விளைவுகளுக்கு இடையே ஈடுபாடு ஒரு முக்கிய மத்தியஸ்தராகும். ஒத்துழைத்துச் செயற்படும் ஆசிரியர்களைக் கொண்ட மாணவர்கள்

அதிக நடத்தை, உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் ஈடுபாட்டைக் காட்டுகிறார்கள். வெளிப்புற சவால்களால் ஊக்கல் தடைப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் இது இன்றியமையாதது ஆகின்றது. Turlock and Mayan (2023) நேரான உறவு மாணவர்களின் உள்ளார்ந்த ஊக்கத்தை அதிகரித்து, சிறந்த நிலைத்தன்மை மிக்க கற்றலுக்கு வழிவகுக்கிறது என்பதையும் வலியுறுத்துகின்றனர்.

கற்றலுக்கு அப்பால், ஆசிரியர-மாணவர் உறவானது மாணவர்களின் உணர்ச்சி, தன்னம்பிக்கை மற்றும் சமூகத் திறன்களில் செல்வாக்கு செலுத்துகின்றன. Zhang, Y., & Wang (2020). அக்கறையுள்ள ஆசிரியர்களது நடத்தைகள் மாணவர்களிடையே பதட்டத்தைக் குறைத்து சுய செயல்திறனை அதிகரிக்கின்றன என்று எடுத்துக்காட்டியுள்ளனர். சமூகப் பொருளாதாரக் காரணிகளால் சமூக-உணர்ச்சிப் பிரச்சினைகள் பரவலாக இருக்கும் கொழும்பு தெற்கு கல்வி வலயம் போன்ற சூழல்களில், ஆசிரியர-மாணவர் உறவினை வளர்ப்பது முழுமையான வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும் (Senawiratne et al.; 2019).

பெரும்பாலும் நகரப் பாடசாலைகள் நெரிசல், வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் அனுபவமற்ற ஆசிரியர்கள் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றன என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்தக் காரணிகள் நேரான ஆசிரியர்-மாணவர் உறவின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடும். இருப்பினும், உறவுமுறைத் திறன்களில் கவனம் செலுத்தும் திட்டமிட்ட ஆசிரியர் பயிற்சியானது, சில தடைகளைக் குறைத்து, வளங்கள் குறைவாக உள்ள சூழல்களிலும்கூட சிறந்த உறவுகளை வளர்க்க முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றன (Silva, & Jayasinghe, 2018). சில சமீபத்திய ஆய்வுகள் கொழும்பு தெற்கு கல்வி வலயத்தின் மீது கவனம் செலுத்துகின்றன. உறவுமுறையின் தரம் குறித்த ஆசிரியர்களின் புலக்காட்சி மாணவர்களின் நடத்தை மற்றும் கற்றல் விளைவுகளைக் கணிசமாகப் பாதிக்கின்றன மேலும், கொழும்பு தெற்கின் பன்முகத்தன்மை வாய்ந்த வகுப்பறைகளில், கலாசாரத்திற்கு ஏற்ற கற்பித்தல் நடைமுறைகள் ஆசிரியர்-மாணவர் உறவுமுறைகளை மேம்படுத்துகின்றன என்று ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

நவீன ஆய்வுகள் கலப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றன. Wickramasinghe, & Seneviratne (2022) ஆசிரியர்-மாணவர் உறவுகளின் தரம் மற்றும் கல்விசார் விளைவுகளை அளவிடும் அளவுசார் கணக்கெடுப்புகள், அத்துடன் ஆசிரியர் மற்றும் மாணவர் புலக்காட்சியை ஆராயும் பண்புசார் நேர்காணல்கள் காலப்போக்கில் ஆசிரியர்-மாணவர் உறவுகளுக்கும் கற்றலுக்கும் இடையிலான காரண-காரிய உறவை ஆராய, நீள்வட்ட வடிவமைப்புகள் பெருகிய முறையில் பொதுவானதாகி வருகின்றன என்று கண்டறிந்தனர். போதுமான சான்றுகள் இருந்தபோதிலும், கற்றல் அடைவுகளில் வேறுபாடுகள் நீடிக்கின்றன. கொழும்பு தெற்கில் உள்ள இடைநிலைப் பாடசாலைகளில் குறிப்பாகக் கவனம் செலுத்தும் ஆய்வுகள் சிலவே உள்ளன, மேலும் அத்தகைய சூழல்களில் ஆசிரியர்-மாணவர் உறவுகளை மேம்படுத்துவதற்கான தலையீட்டு உத்திகளைக் கையாளும் ஆராய்ச்சிகள் குறைவாகவே உள்ளன. எதிர்கால ஆராய்ச்சி, உறவுமுறைப் பயிற்சித் திட்டங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு

சோதனை வடிவமைப்புகளை இணைத்துக்கொள்ளலாம் மற்றும் இலங்கைக்குத் தனித்துவமான கலாசார காரணிகளின் செல்வாக்கை ஆராயலாம். உயர்தர ஆசிரியர்-மாணவர் உறவுகள் கல்விசார் வெற்றி, ஈடுபாடு மற்றும் உணர்ச்சி நல்வாழ்வை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை சமீபத்திய இலக்கிய ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

**ஆய்வு முறை**

கொழும்பு தெற்கு கல்வி வலயத்தில் உள்ள இடைநிலை பாடசாலைகளில், ஆசிரியர்-மாணவர் உறவு கற்றல் விளைவுகளில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக, விபரண ஆய்வு வடிவம் மற்றும் தொடர்பு ஆய்வு வடிவம் பினபற்றப்பட்டதுடன் அளவுசார் ஆய்வு அணுகுமுறையை பின்பற்றி ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு தெற்கு கல்வி வலயத்தில் உள்ள இடைநிலைப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களே இலக்குக் குடித்தொகையாகக் கொள்ளப்பட்டனர். பாடசாலைகள் மற்றும் மாதிரி உறுப்புகளின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை தேர்ந்தெடுக்க, படைமுறை எழுமாற்று மாதிரியெடுத்தல் நுட்பம் பயன்படுத்தப்பட்டது. பன்முகத்தன்மையை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு படையிலிருந்தும் பங்கேற்பதற்காக மாணவர்களும் ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டனர். 95% நம்பிக்கை மட்டம் மற்றும் 5% வழு எல்லையை அடைவதற்காக, காக்ரனின் சூத்திரத்தைப் பயன்படுத்தி மாதிரி அளவு தீர்மானிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் உள்ள மொத்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், போதுமான புள்ளிவிவர ஆற்றலை உறுதி செய்வதற்காக, 100 மாணவர்கள் மற்றும் 100 ஆசிரியர்களைக் கொண்ட ஒரு மாதிரி தெரிவு செய்யப்பட்டது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவருக்கும் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இவை லிக்கேட் அளவுத்திட்ட கூற்றுகளைக் கொண்ட வினா உருப்படிகளாக அமைந்திருந்தன. மாணவர் வினாக்கொத்தானது, தகவல் தொடர்பு, ஆதரவு, நம்பிக்கை மற்றும் வகுப்பறை ஈடுபாடு பால்நிலை வேறுபாடு போன்ற பரிமாணங்கள் உட்பட, ஆசிரியர்-மாணவர் உறவுகள் பற்றிய வினா உருப்படிகளைக் கொண்டிருந்தன. ஆசிரியர்களுக்கான வினாகொத்தானது, மாணவர்களுடனான உறவுகள், கற்பித்தல் உத்திகள் மற்றும் மாணவர் ஈடுபாடு குறித்த அணுகுமுறைகள் தொடர்பான ஆசிரியர்களின் கருத்துக்களை அறிவதற்கான வினா உருப்படிகளை கொண்டிருந்தன.

தரவுகள் SPSS 20 புள்ளிவிபர மென்பொருளைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பியர்சனின் இணைவுக் குணகம், ஆசிரியர்-மாணவர் உறவு மதிப்பெண்களுக்கும் கல்விசார் செயல்திறனுக்கும் இடையிலான உறவை ஆராயும். பாலினம், வயது மற்றும் சமூகப் பொருளாதாரப் பின்னணி போன்ற மாறிகளின் அடிப்படையில் கற்றல் விளைவுகளிலான தாக்கத்தைக் கண்டறிய தொடர்புப் பகுப்பாய்வு மற்றும் பிற்செலவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

***தரவுப்பகுப்பாய்வும் விபரிப்பும்***

ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து லிக்கேட் அளவுத்திட்டக் கூற்றுகளின் ஊடாகப் பெறப்பட்ட வினாக்களின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு அவை ஆய்வு வினாக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

***மாணவர்களின் கற்றல் ஈடுபாடு மற்றும் ஊக்கத்தில் ஆசிரியர்-மாணவர் உறவின் நிலை மற்றும் தரத்தின் செல்வாக்கு***

மாணவர்களின் கற்றல் அனுபவங்களை வடிவமைப்பதில் ஆசிரியர்-மாணவர் உறவுகளின் தரம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக, தனிப்பட்ட கவனம், மாணவர்களின் ஈடுபாடு மற்றும் ஊக்கத்தை கணிசமாகப் பாதிக்கக்கூடிய விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது. கொழும்பு தெற்கு கல்வி வலய இடைநிலை பாடசாலைகளில் இந்த உறவுகள் மாணவர்களின் ஈடுபாடு மற்றும் ஊக்கலை எந்த அளவுக்குப் பாதிக்கின்றன என்பது பற்றிய பகுப்பாய்வு மற்றம் விபரிப்பினை காணலாம். ஆசிரியர்களும் மாணவர்களும், தாங்கள் உணர்ந்த உறவின் தரம், ஈடுபாட்டு நிலைகள் மற்றும் ஊக்கம் ஆகியவற்றை அளவிடும் தரப்படுத்தப்பட்ட வினாக் கொத்துக்களைப் பூர்த்தி செய்தனர். மாறிகளுக்கு இடையிலான உறவுகளைத் தீர்மானிக்க, அளவுசார் தரவுகள் விபரணப் புள்ளிவிவரங்கள், தொடர்புப் பகுப்பாய்வு மற்றும் பிற்செலவுப் பகுப்பாய்வு மாதிரிகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 ஆசிரியர்களில், 60% பெண்கள் மற்றும் 40% ஆண்கள். இவர்களின் கற்பித்தல் அனுபவம் 1 முதல் 15 ஆண்டுகள் வரை இருந்தது ($M$ = 7.2 ஆண்டுகள்). 100 மாணவர்கள் 10, 11 ஆம் வகுப்புகளைச் சேர்ந்நதவர்கள். இவர்களில் பாலினப் பங்கீடு ஏறத்தாள சமமாக இருந்தது (52% பெண்கள், 48% ஆண்கள்). பெறுமானங்கள் யாவும் ஐந்து புள்ளி Likert அளவுத்திட்டக் கூற்றுக்களின் பதில்களை அடிப்படையாகக் கொண்டவை.

**அட்டவணை 1**

*கற்றல் ஈடுபாடு மற்றும் ஊக்கலில் ஆசிரியர் மாணவர் உறவின் தரம்*

| மாறி | சராசரி | நியம விலகல் | வீச்சு |
|---|---|---|---|
| ஆசிரியர்-மாணவர் உறவின் தரம் (TSRQ) | 3.8 | 0.7 | 1-5 |
| மாணவர் ஈடுபாடு (SE) | 3.2 | 3.2 | 1-5 |
| மாணவர் ஊக்கம் (SM) | 3.0 | 0.9 | 1-5 |

இந்தத் தரவுப் புள்ளிகள், 1 முதல் 5 வரையிலான அளவுகோலில் அளவிடப்பட்ட, வெவ்வேறு மாறிகள் அல்லது கட்டமைப்புகளின் மதிப்பீடுகள் அல்லது மதிப்பெண்களைப் பிரதிபலிக்கின்றன, சராசரிகள் மற்றும் நியம விலகல் என்பன ஆசிரியர் ஆதரவு, மாணவர் உறவுகள் போன்ற காரணிகளுடனான தொடர்பை எடுத்துக் காட்டுகின்றன. அதாவது உறவின் தரம், ஈடுபாடு மற்றும் ஊக்கம் ஆகியவை மிதமான அளவில் இருப்பதாக இந்தத் தரவுகள் குறிப்பிடுகின்றன. இவை தொடர்பாகக் கணிக்கப்பட்ட பியர்சனின் தொடர்பு குணகங்கள் பொருண்மையான நேர்த் தொடர்புகள் காணப்படுவதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

**அட்டவணை 2**

*ஆசிரியர்-மாணவர் உறவின் தரம் தொடர்பான பியர்சனின் தொடர்பு குணகங்கள்*

| மாறிகள் | தொடர்புக்குணகம் | பொருண்மை |
|---|---|---|
| ஆசிரியர்-மாணவர் உறவின் தரம் (TSRQ) மற்றும் மாணவர் ஈடுபாடு | .68 | $p < .001$ |
| ஆசிரியர்-மாணவர் உறவின் தரம் (TSRQ) மற்றும் மாணவர் ஊக்கம் | .72 | $p < .001$ |
| மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்கம் | .75 | $p < .001$ |

உயர்வாக உணரப்படும் ஆசிரியர்-மாணவர் உறவின் தரம், மாணவர்களிடையே அதிகரித்த ஈடுபாடு மற்றும் ஊக்கலுடன் வலுவாகத் தொடர்புடையது என்பதை இந்த முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இங்கு மாறிகளுக்கு இடையிலான உறவுகளை, இணைவுக் குணகங்கள் ($r$) மற்றும் பொருண்மை நிலைகளுடன் ($p$-மதிப்புகள்) காணலாம். ஆசிரியர்-மாணவர் உறவின் தரம் மற்றும் மாணவர் ஈடுபாட்டுக்கு இடையிலான இணைவுக் குணகம், $r = .68$, $p < .001$ ஆகக் காணப்பட்டது. இது ஆசிரியர்-மாணவர் உறவின் தரத்திற்கும் மாணவர் ஈடுபாட்டிற்கும் இடையே ஒரு வலுவான, பொருண்மையான நேர்த்தொடர்பு நிலவுவதனை எடுத்துக் காட்டுகிறது. இங்கு உறவின் தரம் அதிகரிக்கும்போது, மாணவர் ஈடுபாடும் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டது.

ஆசிரியர்-மாணவர் உறவின் தரம் மற்றும் மாணவர் ஊக்கல் அகியவற்றுக்கு இடையிலான இணைவுக் குணகம், $r = .72$, $p < .001$ ஆகக் காணப்பட்டது. இதன்படி உறவின் தரத்திற்கும் மாணவர் ஊக்கலுக்கும் இடையே ஒரு வலுவான, பொருண்மையான நேர்த்தொடர்பு காணப்படுவது கண்டறியப்பட்டது. அதாவது சிறந்த உறவுகள் அதிக ஊக்கலுக்கு இட்டுச்செல்வது அவதானிக்கப்பட்டது. மேலும், மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்கல் என்பவற்றுக்கு இடையிலான இணைவுக்குணகம் $r = .75$, $p < .001$ ஆகக் காணப்பட்டது. இது கற்றல் ஈடுபாடும் ஊக்கலும் வலுவாகவும் பொருண்மையான வகையிலும் நேரான தொடர்புடையவை என்பதை வெளிப்படுத்துவதுடன் அதிக ஈடுபாடு கொண்ட மாணவர்கள் அதிக ஊக்கலுக்கு உள்ளாவது கண்டறியப்பட்டது. இந்த மூன்று தொடர்புகளும் வலுவானவை மற்றும் புள்ளிவிவரப்படி பொருண்மையானவையாக உள்ளன.

***ஆசிரியர் எதிர்பார்ப்புகள் மாணவர்களின் ஊக்கத்தில் ஏற்படுத்தும் தாக்கம்***

ஆசிரியர் எதிர்பார்ப்புகளுக்கும் மாணவர் ஊக்கலுக்கும் இடையிலான உறவானது மாணவர்களைப் பற்றிய ஆசிரியர்களின் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும், மாணவர்களின் சுய கற்றல் திறன் தொடர்பான ஊக்கலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை எடுத்து விளக்குகிறது. ஆசிரியர் எதிர்பார்ப்புகளுக்கும் மாணவர் ஊக்கலுக்கும் இடையே ஒரு நேரான தொடர்பு நிலவுவதை தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. அதாவது இவற்றிற்கு இடையே கணிக்கப்பட்ட பியர்சனின் இணைவுக் குணகம், $r = .65$ ($p < .001$); வலுவான நேர்த் தொர்பு நிலவுவதை குறிக்கிறது. இது, உயர் ஆசிரியர் எதிர்பார்ப்புகள் மாணவர்களை உயர் ஊக்கலுக்கு

இட்டுச் செல்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. மேலும், மாணவரின் வயது, பாலினம் மற்றும் கல்விச் செயல்திறன் போன்ற பிற மாறிகளைக் கட்டுப்படுத்தும்போது, ஆசிரியர் எதிர்பார்ப்புகள் மாணவர் ஊக்கலை கணிசமாகக் பாதிக்கின்றது என்பதனை இவற்றிற்கு இடையே கணிக்கப்பட்ட பிற்செலவுப் பகுப்பாய்வுக் குணகப் பெறுமானம், $\beta = 0.45$, $p < .001$, எடுத்துக்காட்டுகிறது. அதாவது, ஆசிரியர் எதிர்பார்ப்பில் ஏற்படும் ஒவ்வொரு அலகு அதிகரிப்பிற்கும், மாணவர் ஊக்கல் புள்ளிகள் 0.45 அலகுகள் அதிகரிக்கின்றன என்பதை இது வெளிப்படுத்துகின்றது. உயர் மற்றும் குறைந்த ஆசிரியர் எதிர்பார்ப்புகளைக் கொண்ட வகுப்புகளை ஒப்பிட்டு செய்யப்பட்ட பகுப்பாய்வுகளின்படி, குறைந்த ஆசிரியர் எதிர்பார்ப்புகளைக் கொண்ட வகுப்புகளின் மாணவர்களை விட உயர் ஆசிரியர் எதிர்பார்ப்புகளைக் கொண்ட வகுப்புகளின் மாணவர்கள் உயர் ஊக்கலைக் கொண்டுள்ளனர். ஆசிரியர்களின் உயர் எதிர்பார்ப்புடைய வகுப்புகளின் மாணவர்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிக ஈடுபாட்டையும் உள்ளார்ந்த ஊக்கலையும் வெளிப்படுத்துகின்றனர். உயர் ஆசிரியர் எதிர்பார்ப்பு உடைய வகுப்புகளில் உள்ள மாணவர்களின் சராசரி ஊக்கல் பெறுமானம் ($M = 4.2$, $SD = 0.5$) இது குறைந்த ஆசிரியர் எதிர்பார்ப்பு உடைய வகுப்புகளில் உள்ள மாணவர்களை விட ($M = 3.5$, $SD = 0.6$) குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக உள்ளது.

**அட்டவணை 3**

*ஆசிரியர் மாணவ உறவும் மாணவர் அடைவில் அதன் தாக்கமும்*

| தொடர்பின் தரம் | மாணவர் எண்ணிக்கை | சராசரி GPA | *SD* |
|---|---|---|---|
| 1 குறைவு | 21 | 1.8 | 0.4 |
| 2 சாதாரணம் | 25 | 2.2 | 0.5 |
| 3 நன்று | 30 | 2.8 | 0.4 |
| 4 மிக நன்று | 14 | 3.2 | 0.3 |
| 5 அதி சிறப்பு | 10 | 3.6 | 0.2 |

ஆசிரியர்-மாணவர் உறவுகள் மோசமாக உள்ள மாணவர்கள் குறைந்த GPA யைப் பெற்றனர் இது பலவீனமான கல்விச் செயல்திறனைக் குறிக்கிறது. மோசமான உறவுகளுடன் ஒப்பிடும்போது GPA யில் ஒரு சிறிய முன்னேற்றம் காணப்படுகிறது, இது சிறந்த உறவுகள் செயல்திறனை நேரான முறையில் பாதிக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. உயர் GPA யானது மிக நல்ல ஆசிரியர்-மாணவர் உறவுகள் மேம்பட்ட கல்விச் செயல்திறனுடன் தொடர்புடையவை என்பதை வலுப்படுத்துகிறது. மிக உயர்ந்த GPA, இது சிறந்த ஆசிரியர்-மாணவர் உறவுகள் கல்வி வெற்றியில் ஒரு வலுவான நேரான தாக்கத்தை ஏற்படுத்துவதைக் எடுத்துக்காட்டுகின்றது. மாணவர்களின் கல்வி ஊக்கல் மற்றும் செயல்திறனில் ஆசிரியர் ஆதரவும் ஊக்கலும் முக்கியமான காரணிகளாகும். இந்த ஆய்வு, ஆசிரியர் ஆதரவிற்கும் மாணவர்களின் கல்வி அடைவு, ஊக்கல் நிலைகள் மற்றும் ஒட்டுமொத்த திருப்திக்கும் இடையிலான உறவை ஆராய்ந்தது. ஆசிரியர் ஆதரவு மற்றும் ஊக்கலின் அளவுகள், கல்விச்

செயல்திறன் (GPA), ஊக்க மதிப்பெண்கள் மற்றும் திருப்தி நிலைகள் ஆகியவையும் இங்கு அளவிடப்பட்டன.

**அட்டவணை 4**

*கல்வி அடைவு, ஊக்க நிலைகள் மற்றும் திருப்திக்கும் இடையிலான தொடர்புகள்*

| மாறிகள் | இடை | நியம விலகல் | வீச்சு |
|---|---|---|---|
| ஆசிரியர் அதரவு (1-5) | 4.2 | 0.8 | 1.0 - 5.0 |
| ஊக்கல் (1-5) | 4.0 | 0.9 | 1.0 - 5.0 |
| புள்ளிகளின் சராசரி (GPA) | 3.3 | 0.5 | 2.0 - 4.0 |
| ஊக்கல் பெறுமானம்(1-10) | 8.2 | 1.2 | 4.0 - 10.0 |
| திருப்தி மட்டம் (1-5) | 4.1 | 0.7 | 2.0 - 5.0 |

முக்கிய மாறிகளுக்கான விபரணப் புள்ளிவிவரங்கள், மாதிரியின் தரவுப் பரவல் மற்றும் மையப் போக்குகள் பற்றிய விளக்கத்தை வழங்குகின்றன. ஆசிரியர் ஆதரவுப் பெறுமானம், 1-5 அளவுகோலில் 4.2 என்ற உயர் சராசரியையும், 0.8 என்ற நியம விலகலையும் கொண்டுள்ளது. இது, மாணவர்களிடையே சில வேறுபாடுகளுடன், பொதுவாக வலுவான ஆசிரியர் ஆதரவு உணரப்படுவதைக் குறிக்கிறது. ஊக்கல் பெறுமானப் புள்ளி 4.0 என்ற உயர் சராசரியையும், 0.9 என்ற சற்றே உயர்ந்த நியம விலகலையும் காட்டுகிறது. இது, மாணவர்கள் பொதுவாக ஊக்கலடைவதாக உணர்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது. மாணவர்களின் GPA 2.0 முதல் 4.0 வரையிலான அளவுகோலில் 3.3 என்ற சராசரியையும், 0.5 என்ற நியம விலகலையும் கொண்டுள்ளது. இது, மிதமான அளவிலான கல்விச் சாதனையையும், மாதிரி முழுவதும் சில வேறுபாடுகளையும் பிரதிபலிக்கிறது. ஊக்கல் பெறுமான அளவு 1-10 அளவுகோலில் 8.2 என்ற சராசரியையும், 1.2 என்ற நியம விலகலையும் கொண்டுள்ளதானது குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்தாலும், மாணவர்களிடையே பொதுவாக உயர் ஊக்கல் நிலை காணப்படுவதை எடுத்துக் காட்டுகிறது.

1-5 அளவுகோலில் அளவிடப்பட்ட திருப்தி நிலை, 0.7 என்ற நியம விலகலுடன் 4.1 என்ற சராசரியைக் கொண்டுள்ளது. இது பெரும்பாலான மாணவர்கள் அதிக திருப்தியை வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது, இருப்பினும் பதில்களில் சில வேறுபாடுகள் உள்ளன. ஒட்டுமொத்த தரவுகளும் ஆசிரியர் ஆதரவு, ஊக்கல் மற்றும் மாணவர் உந்துதல் ஆகியவற்றின் மீதான நேரான கண்ணோட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றன, இது அவர்களின் கல்வி திருப்தி மற்றும் செயல்திறனுக்கு பொருண்மையுடைய பங்களிப்பை வழங்குவதை எடுத்துக் காட்டுகிறது.

**அட்டவணை 5**

*மாறிகளுக்கிடையிலான பிற்செலவுப் பகுப்பாய்வு*

| Dependent variable | Predictor Variables | Beta Coefficient | $R^2$ | *p*-value |
|---|---|---|---|---|
| சராசரிப் புள்ளி | ஆசிரியர் அதரவு, ஊக்கல் | 0.35, 0.28 | 0.30 | $< .001$ |
| ஊக்கல் பெறுமானம் | ஆசிரியர் அதரவு, ஊக்கல் | 0.40, 0.33 | 0.36 | $< .001$ |
| திருப்தி மட்டம் | ஆசிரியர் அதரவு, ஊக்கல் | 0.30, 0.25 | 0.28 | $< .001$ |

ஆசிரியர் ஆதரவு ($\beta$ = 0.35) மற்றும் ஊக்கல் ($\beta$ = 0.28) ஆகிய இரண்டும் GPA இன் பொருண்மையான நேரான முன்கணிப்புகளாகும். இது, ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கும் உயர் மட்ட ஆதரவும் ஊக்கலும் அதிக GPA மதிப்பெண்களுடன் தொடர்புடையவை என்பதைக் குறிக்கிறது. இந்த மாதிரி, GPA இல் உள்ள மாறுபாட்டின் சுமார் 30% ஐ விளக்குகிறது ($R^2$ = 0.30). குறைந்த *p*-மதிப்புகள் ($p < .001$), இந்த உறவுகள் புள்ளிவிவரப்படி பொருண்மையானவை என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஊக்கலுடன் ($\beta$ = 0.33) ஒப்பிடும்போது, ஆசிரியர் ஆதரவு, ஊக்கல் மதிப்பெண்ணில் வலுவான தாக்கத்தை ($\beta$ = 0.40) ஏற்படுத்துகிறது. இந்த மாதிரி, ஊக்கல் மதிப்பெண்ணில் உள்ள மாறுபாட்டின் 36% ஐ விளக்குகிறது. இது, மாணவர் ஊக்கலில் ஆசிரியர் தொடர்பான காரணிகளின் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவதைக் காட்டுகிறது. இரண்டு முன்கணிப்பிகளும் புள்ளிவிவரப்படி பொருண்மையானவை, அவற்றின் *p* மதிப்புகள் .001 ஐ விடக் குறைவாக உள்ளன.

ஆசிரியர் ஆதரவு மற்றும் ஊக்கல் ஆகிய இரண்டும் மனநிறைவு மட்டத்தில் நேரான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதில் ஆசிரியர் ஆதரவு ஒப்பீட்டளவில் சற்றே அதிக தாக்கத்தைக் காட்டுகிறது ($\beta$ = 0.30). இந்த மாதிரி, திருப்தி மட்டத்தில் உள்ள மாறுபாட்டின் 28%-ஐக் கணக்கில் கொள்கிறது, மேலும் இந்தத் தொடர்புகள் புள்ளிவிவரப்படி பொருண்மையானவை. ஆசிரியர் ஆதரவும் ஊக்கமும், GPA, ஊக்கல் மதிப்பெண் மற்றும் திருப்தி நிலை ஆகிய மூன்று சார்பு மாறிகளிலும் வலுவான, நேரான மற்றும் புள்ளிவிவரப்படி பொருண்மையானவையாக உள்ளன.

**மாணவர்களுடனான உறவுகள் குறித்த ஆசிரியர்களின் புலக்காட்சியும் அவை கற்பித்தல் முறைகளில் ஏற்படுத்தும் தாக்கமும்**

மாணவர்களுடனான உறவு குறித்த ஆசிரியர்களின் புலக்காட்சி (லிகர்ட் அளவுகோல் மூலம் அளவிடப்பட்டது: 1-முற்றிலும் உடன்படவில்லை முதல் 5-முற்றிலும் உடன்படுகிறேன் வரை) "நான் என் மாணவர்களுடன் இணைந்திருப்பதாக உணர்கிறேன்," "நேர்மறையான உறவுகள் கற்றலை மேம்படுத்துகின்றன என்று நான் நம்புகிறேன்," போன்றவை. கற்பித்தல் நடைமுறைகள் (அதிர்வெண் அல்லது தரக் குறிகாட்டிகள் மூலம் அளவிடப்பட்டது) மாணவர் மைய முறைகளைப் பயன்படுத்துதல், வகுப்பறை ஈடுபாட்டு உத்திகள் போன்றவை.

**அட்டவணை 6**

*மாணவர் மைய முறைகளைப் பயன்படுத்துதல், வகுப்பறை ஈடுபாட்டு உத்திகள்*

| மாறி | சராசரி | நியம விலகல் | வீச்சு |
|---|---|---|---|
| நேர்மறையான உறவுகள் குறித்த புலக்காட்சி | 4.2 | 0.6 | 2.5-5 |
| மாணவர் மைய நடைமுறைகளைப் பயன்படுத்துதல் | 3.8 | 0.7 | 2-5 |

உறவுகள் குறித்து அதிக நேரான புலக்காட்சி கொண்ட ஆசிரியர்கள், அதிக மாணவர் மைய நடைமுறைகளைக் கையாளுகிறார்கள். உணர்வு மதிப்பெண்களுக்கும் கற்பித்தல் நடைமுறைகளுக்கும் இடையிலான தொடர்பு: $r = .65,\ p < .001$. உறவுகள் பற்றிய உணர்வு மற்றும் கற்பித்தல் நடைமுறைகளுக்கிடையிலான இணைவுக்குணகம் ($r = .65,\ < .001$) ஆகக் காணப்பட்டது. இது .001-க்கும் குறைவான $p$ - மதிப்புடன் கூடிய .65 என்ற மதிப்பு, புள்ளிவிவரப்படி ஒரு பொருண்மையான நேரான உறவு அல்லது விளைவைக் குறிக்கிறது. குறிப்பாக, உணர்வு மதிப்பெண்களுக்கும் மற்றும் கற்பித்தல் நடைமுறைகளுக்கும் இடையேயான தொடர்பு வலுவாக உள்ளது, இச்சூழலில் மேற்படி மாறிகள் அர்த்தமுள்ள வகையில் தொடர்புடையவை என்பதையும், இந்த உறவு தற்செயலான மாறுபாட்டின் காரணமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. இப் பொருண்மையான நேர் தொடர்பு வலுவான உறவுகளை உணரும் ஆசிரியர்கள் அதிக மாணவர் மைய நடைமுறைகளைப் பயன்படுத்த முனைகிறார்கள் என்பதைக் குறிக்கிறது.

**அட்டவணை 7**

*உணர்வுகளின் அடிப்படையில் கற்பித்தல் நடைமுறைகள் தொடர்பான பிற்செலவுப் பகுப்பாய்வு*

| மாறி | குணகம் (β) | *p*-மதிப்பு |
|---|---|---|
| உறவுகள் பற்றிய உணர்வு | 0.75 | *< .001* |

ஆசிரியர்களின் உணர்வுகள் அவர்களின் கற்பித்தல் அணுகுமுறைகளை நேராகப் பாதிக்கின்றன. உறவுகள் பற்றிய உணர்வுகளை மேம்படுத்துவது, அதிக ஈடுபாடுள்ள மற்றும் மாணவர் மைய வகுப்பறைகளை விரவாக்க உதவும். மாணவர்களுடனான தங்கள் உறவுகள் குறித்த ஆசிரியர்களின் கண்ணோட்டங்களுக்கும் அவர்களின் கற்பித்தல் நடைமுறைகளுக்கும் இடையே ஒரு வலுவான தொடர்பு இருப்பதை இந்தத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. உறவுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தும் தொழில்முறை மேம்பாடு, கற்பித்தல் செயல்திறனை மேம்படுத்தக்கூடும்.

***ஆசிரியர்கள் மாணவர்களுடனான தங்கள் உறவுகளை எவ்வாறு உணர்கிறார்கள், மேலும் இந்த உணர்வுகள் அவர்களின் கற்பித்தல் நடைமுறைகளை எவ்வாறு பாதிக்கின்றன?***

ஆசிரியர்-மாணவர் உறவுகள் குறித்த கண்ணோட்டங்களையும், அதன் விளைவாக ஏற்படும் ஈடுபாடு, ஊக்கல், திருப்தி மற்றும் கற்பித்தல் நடைமுறைகள்

உள்ளிட்ட கற்றல் விளைவுகளையும் அவற்றில் பாலினம் எவ்வாறு பாதிக்கிறது என்பதும் இங்கு ஆராயப்பட்டது. நேரான உறவுகளை வளர்த்து, கல்விசார் சாதனைகளை மேம்படுத்தும் கல்வி உத்திகளை உருவாக்குவதற்கு, பாலின வேறுபாடுகளை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமானது.

ஆரம்பத் தரவுகள், மாதிரி முழுவதும் உணரப்பட்ட உறவின் தரம், ஈடுபாடு மற்றும் ஊக்கம் ஆகியவை மிதமான அளவில் இருப்பதைக் காட்டுகின்றன. கல்விச் சூழலில் பல்வேறு நேரான விளைவுகளுக்கு ஆசிரியர் ஆதரவும் ஊக்கமும் பொருண்மையான முன்கணிப்பாக உள்ளன என்பதைத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக GPA மீதான தாக்கம், ஆசிரியர் ஆதரவு (β = 0.35) மற்றும் ஊக்கல் (β = 0.28) ஆகியவை மாணவர்களின் GPA உடன் நேரான தொடர்புடையவை, இதன் $R^2$ = .30 ஆகும். இது, GPA வில் உள்ள மாறுபாட்டின் சுமார் 30% இந்த காரணிகளால் விளக்கப்படலாம் என்பதைக் குறிக்கிறது. *p*-மதிப்புகள் ($p < .001$) இந்த உறவுகள் புள்ளிவிவர ரீதியாக பொருண்மையானவை என்பதைக் காட்டுகின்றன.

ஊக்கல் மதிப்பெண் மீதான தாக்கமானது ஆசிரியர் ஆதரவு (β = 0.40) மற்றும் ஊக்கல் (β = 0.33) ஆகியவை மாணவர்களின் ஊக்கலை வலுவாக முன்கணிக்கின்றன, இதன் $R^2$ மதிப்பு .36 ஆகும். அதாவது, இந்த மாறிகள் ஊக்கல் நிலைகளில் உள்ள மாறுபாட்டின் 36% க்குக் காரணமாகின்றன. *p*-மதிப்புகள் ($p < .001$) இந்த முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகின்றன.

மனநிறைவு மட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கமாக ஆசிரியர் ஆதரவு (β = 0.30) மற்றும் ஊக்கம் (β = 0.25) ஆகியவையும் ஆசிரியர்களின் மனநிறைவு மட்டங்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. $R^2$ = .28 எனும் மதிப்புடன், ஆதரவும் ஊக்கமும் மனநிறைவில் உள்ள மாறுபாட்டின் 28% விளக்குகின்றன என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆசிரியர்கள், மாணவர்களுடனான தங்கள் உறவுகளை முதன்மையாக ஆதரவு மற்றும் ஊக்கல் என்ற கண்ணோட்டத்தின் வழியாகவே பெரும்பாலும் உணர்கிறார்கள். உணர்வுப்பூர்வமான மற்றும் கல்விசார் ஆதரவை வழங்குவது மாணவர்களின் சிறந்த விளைவுகளை வளர்க்கிறது என்ற அவர்களின் நம்பிக்கை, இந்த குறிப்பிடத்தக்க முன்கணிப்பு உறவுகளில் பிரதிபலிக்கிறது. ஆதரவு மற்றும் ஊக்கலால் வகைப்படுத்தப்படும் நேரான உறவுகளை ஆசிரியர்கள் உணரும்போது, அவர்கள் தங்கள் பணிகளில் அதிக உந்துதலுடனும் மனநிறைவுடனும் இருக்கின்றனர். இந்த நேரான பார்வை, மேலும் ஈடுபாடுள்ள, பதிலளிக்கக்கூடிய மற்றும் ஆதரவான கற்பித்தல் நடைமுறைகளுக்கு வழிவகுத்து, ஒரு உகந்த கற்றல் சூழலை உருவாக்கும். ஆதரவையும் ஊக்கலையும் வளர்ப்பதன் மூலம், மாணவர்களுடனான தங்கள் உறவுகள் குறித்த ஆசிரியர்களின் கண்ணோட்டத்தை மேம்படுத்துவது, மாணவர்களின் செயல்திறன், உந்துதல் மற்றும் ஆசிரியர்களிடையே ஒட்டுமொத்த மனநிறைவு ஆகியவற்றை மேம்படுத்த வழிவகுக்கும். உறவுகளை வளர்க்கும்

திறன்களை வலியுறுத்தும் தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இது உணர்த்துகிறது.

***ஆசிரியர்-மாணவர் உறவுகள் குறித்த கண்ணோட்டங்களில் பாலின வேறுபாடுகள்***

**அட்டவணை 8**

*ஆண்களையும் பெண்களையும் ஒப்பிடுவதற்காக நடத்தப்பட்ட வ-சோதனைப் பெறுபேறுகள்*

| மாறிகள் | இடைப் பெறுமானம் (பெண்கள்) | இடைப் பெறுமானம் (ஆண்கள்) | *t*-பெறுமானம் | *p*-பெறுமானம் | விபரிப்பு |
|---|---|---|---|---|---|
| ஆசிரியர் மாணவர் தொடர்பு | 3.9 | 3.7 | 1.45 | *0.15* | பொருண்மையான வேறுபாடு இல்லை |
| மாணவர் ஈடுபாடு | 3.3 | 3.1 | 1.23 | *0.22* | பொருண்மையான வேறுபாடு இல்லை |
| மாணவர் ஊக்கல் | 3.2 | 2.8 | 2.45 | *0.015* | பொருண்மையான வேறுபாடு உண்டு. பெண்கள் அதிக ஊக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். |

பெண் மாணவர்கள் ஆண்மாணவர்களை விட சற்றே அதிக ஊக்கலைக் கொண்டிருக்கின்றனர், இந்த வேறுபாடு புள்ளிவிவரப்படி குறிப்பிடத்தக்கது ($p < .05$). உணரப்பட்ட உறவின் தரம் அல்லது ஈடுபாட்டில் குறிப்பிடத்தக்க பாலின வேறுபாடுகள் எதுவும் காணப்படவில்லை.

**அட்டணை 9**

*பாலின அடிப்படையிலான இணைவுப் பகுப்பாய்வு*

| பால் | மாணவர் ஈடுபாட்டில் ஆசிரியர் மாணவர் தொடர்பு | மாணவர் ஊக்கலில் ஆசிரியர் மாணவர் தொடர்பு | ஊக்கல் மற்றும் ஈடுபாடு |
|---|---|---|---|
| பெண்கள் | $r = .70, p < .001$ | $r = .75, p < .001$ | $r = .78, p < .001$ |
| ஆண்கள் | $r = .65, p < .001$ | $r = .68, p < .001$ | $r = .72, p < .001$ |

மாறிகளுக்கு இடையேயான பியர்சனின் இணைவுக் குணகங்கள் ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்குத் தனித்தனியாகக் கணக்கிடப்பட்டன. இரு பாலினத்தவருக்கும் உறவின் தரம், ஈடுபாடு மற்றும் ஊக்கல் ஆகியவற்றுக்கு இடையே வலுவான நேர் தொடர்புகள் உள்ளன. பெண்களிடையேயான இணைவுக் குணகங்கள் சற்றே அதிகமாக இருப்பது, இந்த மாறிகள் பெண் மாணவர்களிடையே மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது.

***கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் கருத்துக்களில் பாலினத்தின் செல்வாக்கு***

மாணவர் மைய நடைமுறைகளின் பயன்பாடு குறித்த ஆசிரியர்களின் சுய-அறிக்கையானது பெண்களுக்கான சராசரி 3.9, ஆண்களுக்கான சராசரி 3.7 ஆக அமைந்திருந்தாலும் அவ் வேறுபாடு பொருண்மை அற்றது ($t = 1.10$ , $p = .27$) என்பதை வெளிப்படுத்துவதுடன் உறவுகள் குறித்த ஆசிரியர்களின் கருத்துக்களானது பெண் ஆசிரியர்களின் சராசரி = 4.3 ஆகவும் ஆண் ஆசிரியர்கள் சராசரி = 4.0 ஆகவும் அமைவதுடன், $t = 1.80$ , $p = .07$ ஆகவும் காணப்பட்டது. பெண் மற்றும் ஆண் ஆசிரியர்கள் இருவரும் பொதுவாக நேரான உறவுகளைக் கருதுகின்றனர் என்பதும் ஒத்த கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. பாலின வேறுபாடுகள் முதன்மையாக மாணவர்களின் ஊக்கலில் காணப்படுகின்றன, இதில் பெண்கள் அதிக அளவிலான ஊக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். இணைவுப் பகுப்பாய்வின்படி, நேரான ஆசிரியர்-மாணவர் உறவுகள் இரு பாலினத்தவரிடமும் அதிக ஈடுபாடு மற்றும் ஊக்கத்துடன் வலுவாக இணைக்கப்பட்டுள்ளன. புள்ளிவிவரப் பகுப்பாய்வின்படி, பாலினம் சில கற்றல் விளைவுகளை, குறிப்பாக ஊக்கலைப் பாதிக்கிறது, ஆனால் ஈடுபாடு மற்றும் ஊக்கலின் மீதான ஆசிரியர்-மாணவர் உறவுகளின் அடிப்படையில் நேர் விளைவு இரு பாலினத்தவருக்கும் ஒரே மாதிரியாக உள்ளது. இந்த உறவுகளை வலுப்படுத்தும் நோக்கம் கொண்ட கல்விசார் தலையீடுகள், மாணவர்களின் சாதனை மற்றும் உணர்ச்சி நல்வாழ்வை மேம்படுத்துவதற்காகப் பாலினம் சார்ந்த தேவைகளைக் ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

**முடிவுகள்**

கொழும்பு தெற்கு கல்வி வலயத்திலுள்ள உள்ள தமிழ்மொழி மூல இடைநிலைப் பாடசாலைகளில் ஆசிரியர் எதிர்பார்ப்புகளுக்கும் மாணவர் ஊக்கத்திற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க நேர்த் தொடர்பு இருப்பதை தொடர்பு மற்றும் பின்னடைவுப் பகுப்பாய்வுகளிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே, ஆசிரியர் எதிர்பார்ப்புகளை மேம்படுத்துவது மாணவர் ஈடுபாட்டையும் ஊக்கத்தையும் மேம்படுத்துவதற்கான ஒரு உத்திசார் அணுகுமுறையாக அமையும். மேலும், இடைநிலைப் பாடசாலைகளில் ஆசிரியர்-மாணவர் உறவுகளின் தரத்திற்கும், மாணவர்களின் ஈடுபாடு மற்றும் ஊக்கலுக்கும் இடையே ஒரு வலுவான நேர்த் தொடர்பு இருப்பதை புள்ளிவிவரப் பகுப்பாய்வு தெளிவாகக் காட்டுகிறது. உயர் இணைவுக் குணகங்களும் ($r = .65$) மற்றும் குறிப்பிடத்தக்க பிற்செலவு மாதிரிகளும், உறவுசார் அம்சங்களை மேம்படுத்துவது ஒரு அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆதரவு, புரிதல் மற்றும் நிலைத்தன்மையை வெளிப்படுத்தும் ஆசிரியர்கள், மாணவர்கள் தீவிரமாகப் பங்கேற்பதற்கு உகந்த சூழல்களை வளர்க்க முனைகிறார்கள்.

தங்கள் ஆசிரியர்களை அணுகக்கூடியவர்களாகவும் அக்கறையுள்ளவர்களாகவும் கருதும் மாணவர்கள், வகுப்பறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் உள்ளார்ந்த ஊக்கலை வளர்த்துக் கொள்வதற்கும் அதிகம் ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும்,

ஆசிரியர்-மாணவர் உறவுகளின் தரத்திற்கும் மாணவர்களின் GPA யிற்கும் இடையே ஒரு நேரான தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது. உறவின் தரமானது மோசமானதிலிருந்து சிறந்ததாக மேம்படும்போது, மாணவர்கள் கல்வியில் சிறப்பாகச் செயல்பட முனைகின்றனர். கல்வி விளைவுகளை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே வலுவான, நேரான உறவுகளை வளர்ப்பதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்களுடனான தங்கள் உறவு, ஆதரவு மற்றும் ஊக்கல் ஆகியவற்றை முதன்மையாகக் கருதுகிறார்கள் என்பதை இந்த ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகிறன. இது அவர்களின் தொழில்முறை அடையாளத்திற்கு மையமாக இருப்பது மட்டுமல்லாமல், கற்றல் விளைவுகளையும் கணிசமாகப் பாதிக்கின்றன. ஆதரவான மற்றும் ஊக்கமளிக்கும் தொடர்புகளைத் தங்கள் கற்பித்தல் அணுகுமுறையின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதும் ஆசிரியர்கள், மிகவும் நேரான மற்றும் ஆக்கப்பூர்வமான வகுப்பறைச் சூழலை வளர்க்க முனைகிறார்கள் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய கண்ணோட்டங்கள், ஆசிரியர்களைத் தங்கள் மாணவர்களுடன் மிகவும் சுறுசுறுப்பாகவும் பொறுப்புடனும் ஈடுபடத் தூண்டுகின்றன. இது மாணவர்களின் சாதனை மற்றும் உந்துதலை மேம்படுத்துவதோடு, தங்கள் பணிகளில் ஆசிரியர்களின் மனநிறைவையும் அதிகரிக்கிறது.

**உசாத்துணைகள்**


Ainsworth, M. D. S. (2015). Attachment theory and research: A summary of the findings. *Journal of Child Psychology and Psychiatry, 56(3),* 234-245.

Roorda, D. L., Koomen, H. M. Y., Spilt, J. L., & Oort, F. J. (2011). The influence of affective teacher–student relationships on students’ school engagement and achievement: A meta-analytic review. *Review of Educational Research, 81(4),* 493–529. https://doi.org/10.3102/0034654311421793

Senawiratne, R., (2019). Socio-emotional development and teacher-student relationships in Colombo South. *South Asian Journal of Education, 8(1),* 33-50.

Silva, P., & Jayasinghe, T. (2018). Teacher training in relationship-building skills in resource-poor settings. *Journal of Teacher Education, 22(4),* 210-225.

Turlock, L. and Mayan, M. J. (2023). How can community-based participatory research address hate crimes and incidents? *Engaged Scholar Journal: Community-Engaged Research, Teaching, and Learning 9(1),* 61–74.

Vygotsky, L. S. (1978). *Mind in society: The development of higher psychological processes*. Harvard University Press.

Wickramasinghe, S., & Seneviratne, D. (2022). Examining causal relationships between teacher-student relationships and learning outcomes through elliptical designs. *Educational Methodology Review*, *14(2)*, 123-138.

Zhang, Y., & Wang, L. (2020). Caring teacher behaviors, anxiety, and self-efficacy: Impacts on student well-being. *Psychology in Education Journal*, *25(3)*, 67-81.